ஆரணி-பாலவாக்கம் சாலையில் பாலம்

*** 589 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், ஆரணியையும் பாலவாக்கம் கிராமத்தையும் இணைக்க ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் Road Dam அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : நம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு ஆரணியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி அந்த அணை இருக்கும் கிராமங்களுக்குப் பக்கத்தில் தண்ணீர் தேங்குகிறது. ஆகவே, பல ஊர்களை இணைக்கின்ற இந்தப் பாலத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையில் 33 லட்சம் ரூபாய்தான் இன்னும் பாக்கி இருக்கிறது. ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்கள் இருக்கும் காரணத்தால் இப்போது இதனை ஏற்றுக் கொள்ள சாத்தியமில்லை.

தென்னார்க்காடு மாவட்டத்தில் புதிய பாலங்கள்

*** 590 வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தியாகதுருகம் அருகே ஓடும் மணிமுத்தாறு நதி குறுக்கே ஒரு மேம்பாலமும், அசகுளத்தூர் அருகே ஓடும் மயூரா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும், ஈருடையான்பட்டி அருகே ஓடும் முசகுந்தா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : தென்னாற்காடு மாவட்டத்தில் ரிஷிவந்தியம் தொகுதி பின்தங்கிய தொகுதி. அது காடுகளும் ஆறுகளும் நிறைந்த பகுதி. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு

1973 டிசம்பர் 3]

செல்ல ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மழைக் காலங்களில் மணிமுத்தா, முசுகுந்தா, மயூரா நதிகளைக் கடந்து செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு மறுபரிசிலனை செய்து மேம்பாலம் கட்டித் தராவிட்டாலும் தரைப் பாலமாவது கட்டித்தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மயூரா நதியின் மீதும் மணிமுத்தா நதியின் மீதும் பாலம் கட்டவும், சாலை மேம்பாட்டுக்காகவும் 13 லட்சம் ரூபாய் செலவாகும் என்று அறிவித்துள்ளார்கள். மணிமுத்தா நதியில் பாலம் கட்ட 6 லட்சம் ரூபாய்; மயூரா நதியில் பாலம் கட்ட 5 லட்சம் ரூபாய், சாலை மேம்பாட்டுக்கு 2 லட்சம் ரூபாய் ஆக 13 லட்சம் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அது பிற சாலைகள் திட்டத்தில் சேர்க்கப்படலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முசுகுந்தா நதியில் பாலம் கட்ட 30,000 ரூபாய் செலவாகுமென்று 'ரப் எஸ்டிமேட்' தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இதர சாலைகள் என்ற தலைப்பில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

தாம்பிரவருணி பாலத்தில் போக்குவரத்து.

*** 591 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவியில் தாம்பிரவருணி ஆற்றின் குறுக்கே புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியாகப் போக்குவரத்து நடைபெறுவது ஜூன் 1972 முதல் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

(உ) அந்தப் பாலம் எப்போது கட்டப்பட்டது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். 16—6—1972 முதல் 20—6—1972 முடிய ஐந்து நாட்கள் மட்டும் தற்காலிகமாக தடைப்பட்டது.

(இ) சில மாதங்களுக்கு முன் எதிர்பாராத பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் தாமிரபாணி ஆற்றின் குறுக்கே சேரன்மகாதேவி பக்கம் கட்டப்பட்டுள்ள தாம்போதி